**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 397/2014** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | தாமோதரன் | **வயது** | : | 87 |
| **த.பெ** | : | குமாரசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | வடமாதிமங்கலம் | **தொழில்** | : | வேலை எதுவும்செய்யவில்லை. |

**03.02.2026 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) நான் தாக்கல் செய்த முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் எற்கனவே தாக்கல் செய்த எதிர்வழகககுரையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை நான் என்னுடைய முதன்மை விசாரணைவாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் இல்லை. தற்போது தாக்கல் செய்த முதல்விசாரணை வாக்குமூலத்தில் எதிர்வழக்குரையில் கூறாத சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் எதுவும் தொந்தரவு செய்யவில்லையா என்றால் செய்யவில்லை. ஞானவேல் தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கு தாவாவின் படி தீர்ப்பாக எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் ஆட்சேபணை இல்லை, அவர் சொத்தை அவர் எடுத்துகொள்ளலாம்.

2)எனக்கும் வாதிக்கும் முன்விரோதம் இருந்ததா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாதிக்கும், எனக்கும் முன்விரோதம் காரணமாக தகராறு இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் நான் எதிர்வழக்குரையில் அப்படி தெரிவிக்கவில்லை. தாவா தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து வாதிக்கு உரியது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நான் ஆக்கிரமனம் செய்ததாக வாதி கூறுகிறார் என்றால் இல்லை. ஊரில் பஞ்சாயத்து பேசினார்களா என்றால் இல்லை. ஆகையால் வாதி தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டும் என்றால் என் நிலம் வாங்கி 50 வருடங்கள் ஆகிறது, வாதி தற்போது தான் நிலம் வாங்கினார்.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.02.06 10:30:35 +0530

District Munsif,
Polur.